# மத்திய கிழக்கு வேலைவாய்ப்பின் சமூக - பொருளாதாரத் தாக்கங்கள்

Journal of Social Review
Volume 3 (1)
December 2014
Department of
Social Sciences

(அம்பாறை மாவட்டக் கரையோரப் பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு விஷேட ஆய்வு)

*ஏ. எல். முஹம்மது அஸ்லம்*
*ஏ. ஆர். எஸ். ஜெஸ்மி*

## ஆய்வுச் சுருக்கம்

*இவ்வாய்வின் பிரதான நோக்கம் அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களிலிருந்து மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலைவாய்ப்புப் பெற்றுச் சென்றோரின் போக்கு, அவ் வேலைவாய்ப்பினால் ஏற்பட்டுள்ள சமூக - பொருளாதார தாக்கங்கள் என்பனவற்றை இனங்காண்பதாகும். இதற்கு 1992ம் ஆண்டுகளின் பின் இன்றுவரை மத்திய கிழக்கு நாடுகளில் வேலை பெற்று நாடு திரும்பிய 836 பேர் எழுமாறாகத் தெரிவு செய்யப்பட்டு அவர்களிடமிருந்து முதலாம் நிலைத்தரவுகள் சேகரிக்கப்பட்டதுடன் இரண்டாம் நிலைத்தரவுகளும் இவ்வாய்வுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. முதலாம் நிலைத் தரவுகள் வினாக்கொத்து, நேர்காணல் மூலமும், இரண்டாம் நிலைத்தரவுகள் மத்திய வங்கி ஆண்டறிக்கைகள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக அறிக்கைகள் மூலமும் பெறப்பட்டுள்ளன. இத்தரவுகள் விபரணப் புள்ளிவிபரவியல் வரைபடமுறை, கைவர்க்கச் சோதனைமுறை, குறியீட்டுச் சோதனைமுறை, பிற்செலவுப் பகுப்பாய்வு முறை போன்றவை களினூடாக பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. இவ்வாய்வின் முடிவாக இலங்கையின் மொத்த தனியார் மாற்றல்களில் ஆய்வுப்பிரதேச மக்கள் பெரும் பங்களிப்புச் செய்துள்ளமையையும், ஆய்வுப் பிரதேச வேலையின்மையை குறைப்பதிலும், சேமிப்பு, முதலீடு என்பனவற்றை அதிகரிப்பதிலும், மக்களின் வாழ்க்கைத்தரம், திருமணவாய்ப்புக்கள், பிள்ளைகளின் கல்விநிலை என்பவைகள் மீது மத்திய கிழக்கு வேலைவாய்ப்பு பெரும் பங்களிப்புச் செய்துள்ளது. அத்துடன் கணவன், மனைவி, பிள்ளைகளுக்கிடையிலான உறவு, மற்றும் குடும்ப வாழ்வியல் அம்சங்களிலும் மத்திய கிழக்கு நாடுகளுக்கான வேலைவாய்ப்பு பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.*

## அறிமுகம்

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் எதிர் நோக்கும் பாரிய பொருளாதாரப் பிரச்சினை யாக வேலையின்மை காணப்படுகின்றது. அதிகளவு சனத்தொகையைக் கொண்டுள்ள இந்நாடுகளில் அதிகரித்துவரும் ஊழியப் படையை உள்வாங்கக் கூடிய அளவுக்கு பொருளாதாரம் ஸ்திரத்தன்மையற்றுக் காணப்படுகின்றமையால் வேலையின்மை பொருளாதாரத்தில் பாரிய அழுத்தங்களை ஏற்படுத்தி வருகின்றது (ஜினதாச, 1999). மறுபுறம் மத்திய கிழக்கு நாடுகளில் பெற்றோலிய உற்பத்திக் கண்டுபிடிப்பானது அந்நாடுகளின் குடித்தன வருமானத்தை அதிகரிக்கத் தொடங்கியது. இந்நிலையில் மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து ஊழியத் திற்கான கேள்வி அதிகரித்தன (குருஷிஷ் சுவாமி, 1982).

மத்திய கிழக்கு நாடுகளில் ஊழியத்திற்கான கேள்வி அதிகரிப்பை சாதகமாகப் பயன் படுத்திக் கொள்வதற்கு 1977ம் ஆண்டு இலங்கையில் கடைப்பிடிக்கப்பட்ட திறந்த பொருளாதாரக் கொள்கை துணைநின்றது. இந்நிலையில் இலங்கையில் காணப்பட்ட

கல்வியமைப்பு மற்றும் பொருளாதாரக் கட்டமைப்பு என்பன அதிகரித்துவரும் ஊழியப்படையை உள்வாங்கக் கூடியதாகக் காணப்படாமையினால் வேலையின்மை இலங்கையில் பாரிய ஒரு நெருக்கடியாகக் காணப்பட்டது (சந்தா அத்தநாயக்க, 1996).

இலங்கையில் 1977ம் ஆண்டு ஆட்சிக்கு வந்த அரசு வேலையின்மையைக் குறைக்கும் நோக்கிலும், அரசின் அந்நிய செலாவணி வருமானத்தை அதிகரிக்கும் நோக்கிலும் மத்திய கிழக்கு நாடுகளின் வேலைவாய்ப்புக்காக இலங்கையிலிருந்து ஆண், பெண் இருபாலாரையும் ஊக்குவித்தது. 2012ம் ஆண்டில் மொத்த ஊழியப் படையில் 24 சதவீதமானவர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பெற்றுச் சென்றுள்ளனர். இது அண்ணளவாக 10 மில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இலங்கையில் மூன்றில் ஒரு குடும்பம் வெளிநாட்டு வருமானத்தையே நம்பியுள்ளது. (திட்ட அமுலாக்க அமைச்சு,1985). இலங்கையிலிருந்து வருடாந்தம் சராசரியாக 2 இலட் சத்து 30 ஆயிரம் பேர் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக குடிபெயர்ந்து செல்லு கின்றனர் (வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் - 2009).

இலங்கைக்கு அரச வருமானத்தை ஈட்டித் தரும் இரண்டாவது பெரும் துறையாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு காணப்படுகின்றது அதிலும் குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளுக்கான வேலைவாய்ப்பு ஒரு வினைத்திறன் உள்ள துறையாகக் காணப்படுகின்றது (திட்ட அமுலாக்க அமைச்சு, 1985). 2010 ஆம் ஆண்டு வெளி நாடுகளிலிருந்து இலங்கைக்கு அனுப்பப்பட்ட தனியார் பணவனுப்புதல்கள் 2.9 பில்லியன் அமெரிக்க டொலராகும். இது 2011 ம் ஆண்டு மொத்த ஏற்றுமதி வருமானத்தில் 35.9 சதவீதமாகக் காணப்பட்டது (Central Bank Report, 2012). இலங்கைக்கு வெளிநாட்டு நேரடி முதலீட்டின் மூலம் கிடைக்கும் அந்நியச்செலாவணி வருமானத்தினை விட தனியார் பணவனுப்புதல்கள் மூலம் கிடைக்கும் வருமானம் உயர்வானதாகவுள்ளது (அமீன், 1995).

இலங்கையிலிருந்து வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக பயணிப்பவர்களில் பெரும்பாலானவர்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்கே செல்லுகின்றனர். இவர்களில் அதிகமானவர்கள் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இலங்கையின் கிராமப்புறங்களில் வாழும் மக்களில் அதிகமானவர்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழ்வதனால் தமது ஜீவனோ பாயத்திற்கு பெரிதும் சிரமப்படுகின்றனர். ஆண்கள் தமக்குப் பொருத்தமான தொழி லைப் பெறுவது சிரமமாகக் காணப்படுகின்ற போதும் வறிய குடும்பங்கள் தமது குடும்பச் செலவுகளைச் சமாளிப்பதற்காக இக் குடும்பப் பெண்கள் வீட்டுப் பணிப் பெண்களாக மத்திய கிழக்கு நாடுகள் நோக்கி நகருகின்றனர்.
(சந்திரிக்கா 1995).

இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்ற ஆய்வுப் பிரதேசம் அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசத்தில் அமைந்துள்ளது. இம் மாவட்டத்தின் பொருளாதார நடவடிக்கைகள் விவசாயம், மீன்பிடி என்பனவற்றில் தங்கிக் காணப்படுகின்றன. இதனால் பருவகால வேலையின்மை ஆய்வுப்பிரதேசத்தில் காணப்படுவதுடன் இப்பிரதேசம் இலங்கையின் மூன்று தசாப்தகால சிவில் யுத்தத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்ட பகுதியாகவும் காணப்படுகின்றது. இத்தகைய யுத்த சூழ்நிலைகள் இப்பகுதியில் பெண் தலைமைத்துவக் குடும்பங்களை அதிகரிக்கச் செய்துள்ளன.

மேலும் ஆய்வுப்பிரதேசத்தில் திருமணத்துக்காக பெண்கள் “சீதனம்” என்ற சமூகப் பிரச்சினைக்கும் முகம்கொடுக்க வேண்டிய நிலைமை காணப்படுகின்றது. இதனால் அதிகளவான பெண்கள் வீட்டுப் பணிப் பெண்களாக வெளிநாடுகளுக்கு செல்லுகின்றனர். மேலும், இப்பிரதேசத்தின் பொருளாதார நிலைமையும் குடும்பச் செலவுகளை ஈடுசெய்யப் போதுமாகக் காணப்படாமையினாலும் பெரும்பாலான இளைஞர்கள் மத்திய கிழக்கு நாடுகள் நோக்கி குடிபெயர்வதனை அவதானிக்க கூடியதாக உள்ளது (கள ஆய்வு, 2012).

## ஆய்வுப் பிரச்சினை

இலங்கையின் வேலையின்மையைக் குறைப் பதிலும், அந்நியச் செலாவணி வருமா னத்தை ஈட்டித்தருவதிலும் மத்திய கிழக்கு நாடுகளுக்கான வேலைவாய்ப்பு பெரிதும் பங்களிப்புச் செய்து வருகின்றது. இலங்கை யிலிருந்து மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலைாய்ப்பை பெற்றுச் சென்றவர்களில் 50% க்கும் மேற்பட்டவர்கள் அம்பாரை மாவட்ட கரையோர பிரதேசங்களிலிருந்தே சென்றுள்ளார்கள் (வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம், 2009). எனினும் மத்தியகிழக்கு நாடுகளுக்கான வேலை வாய்ப்பினால் ஏற்பட்ட சமூகப் பொருளாதார தாக்கங்கள் தொடர்பான ஆய்வுகள் எதுவும் புள்ளிவிபரரீதியாக இப்பிரதேசத்தை மையப் படுத்தி மேற்கொள்ளப்படவில்லை அத்துடன் ஆய்வுப் பிரதேசத்தில் மத்திய கிழக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தியுள்ள சமூகப் பொருளாதார தாக்கங்கள் தொடர்பாக ஆராய வேண்டிய தேவையுள்ளது. இவை களை ஆய்வுக்கான இடைவெளியாகக் கொண்டு இவ்வாய்வு மேற் கொள்ளப் படுகின்றது.

## நோக்கங்கள்

இவ்வாய்வு அம்பாரை மாவட்ட கரை யோரப் பிரதேசங்களிலிருந்து மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலை வாய்ப்புக்கு சென்றவர்களினால் ஏற்பட்டுள்ள சமூகப் பொருளாதார தாக்கங்களை இனங்காணல் என்ற பிரதான நோக்கத்துடன் பின்வரும் உப - நோக்கங்ளையும் கவனத்திற் கொள் கின்றது.

- ஆய்வுப் பிரதேசத்திலிருந்து மத்திய கிழக்கு நாடுகளுக்கு குடிபெயர்ந்தவர்களின் போக்கினைக் கண்டறிதல்

- மத்தியகிழக்கு வேலைவாய்ப்பைத் தூண்டிய காரணிகளை இனங்காணல் போன்ற உப நோக்கங்களை அடிப்படை யாகக் கொண்டு இவ் ஆய்வு மேற்கொள்ளப் படுகின்றது.

## ஆய்வு முறையியல்

### தரவு சேகரிப்பு

இவ் ஆய்வுக்கு முதலாம் நிலைத் தரவுகள் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் என்பன கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளன. அத்துடன் 1992 – 2012 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப் பகுதியில் மத்திய கிழக்கு நாடு களுக்கு வேலைவாய்ப்புகளுக்காகச் சென்று திரும்பியவர்கள் ஆய்வுக்கு உட்படுத்தப் பட்டுள்ளனர்.

ஆய்வுக்குத் தேவையான முதலாம் நிலைத் தரவுகளைச் சேகரிப்பதற்காக அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களிலிருந்து மத்திய கிழக்கு நாடுகளுக்கு தொழில் பெற்று சென்று திரும்பியவர்களில் 10 சதவீத மானவர்கள் எழுமாறாக தெரிவு செய்யப் பட்டனர். இதற்காக அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களான அட்டாளைச் சேனை, நிந்தவூர், காரைதீவு, சாய்ந்தமருது, கல்முனை தமிழ் மற்றும் முஸ்லீம் பிரிவுகள், நாவிதன்வெளி, அக்கரைப்பற்று, சம்மாந் துறை, இறக்காமம், ஆலையடிவேம்பு, திருக் கோவில், பொத்துவில் ஆகிய 13 பிரதேச செயலகப் பிரிவுகளும் ஒவ்வொரு மாதிரிக் கொத்தாகக் கவனத்திற் கொள்ளப்பட்டு இப்பிரதேசங்களிலிருந்து மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்று திரும்பிய குடும் பங்கள் மொத்த மாதிரிகளுக்கிடையில் பங்கீடு செய்யப்பட்டு தரவுகள் சேகரிக்கப் பட்டுள்ளன. அதனடிப் படையில் 836 குடும் பங்கள் மாதிரியாகத் தெரிவு செய்யப் பட்டுள்ளன.

இரண்டாம் நிலைத் தரவுகளை சேகரிப் பதற்காக 1992 - 2012ம் ஆண்டு வரையிலான காலப்பகுதிகள் கவனத்திற் கொள்ளப்படு கின்றன. இதற்காக மத்திய வங்கியின் ஆண்டறிக்கைகள், வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியக அறிக்கைகள், மாவட்ட திட்டமிடல் செயலக அறிக்கைகள், பிரதேச செயலகங்களின் திட்டமிடல் பிரிவுகளின் அறிக்கைகள் என்பன கவனத்திற் கொள்ளப் பட்டுள்ளன.

## ஆய்வு நுட்பம்

ஆய்வுக்காக பெறப்பட்ட தரவுகள் விபரணப் புள்ளிவிபரவியல் வரைபடமுறை, அனுமானப் புள்ளிவிபரவியல் முறைகளான வில்கொக்சன் குறியீட்டுச் சோதனை முறை, கைவர்க்க சோதனை முறை, பிற்செலவுப் பகுப்பாய்வு முறை என்பவைகள் மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

- விபரணப் புள்ளிவிபரவியல் முறை

இம்முறையின் கீழ் வரைபடமுறை கவனத்திற் கொள்ளப்படுகின்றது.

- அனுமானப் புள்ளிவிபர முறை

இம்முறையின் கீழ் 1992ம் ஆண்டு தொடக்கம் 2012ம் ஆண்டு வரை இலங்கையின் மொத்த தனியார் பணவனுப்புதல்களில் மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து அனுப்பப்பட்ட தனியார் மாற்றல்கள் மற்றும் அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களிலிருந்து மத்திய கிழக்கு நாடுகளுக்கு தொழிலுக்கு சென்றவர்கள் ஒவ்வொருவரும் அனுப்பிய தனியார் மாற்றல்கள் எவ்வாறு மொத்த தனியார் பணவனுப்புதல்களில் செல்வாக்குச் செலுத்தியுள்ளன என்பதனை கண்டறிந்து கொள்வதற்காக பின்வரும் பிற்செலவுப் பகுப்பாய்வு மாதிரியுரு கவனத்திற் கொள்ளப்பட்டு அவற்றின் பரமானங்கள் மதிப்பிடப்பட்டுள்ளன.

$$R_T = f(R_{ME}, R_{AM})$$

$$R_T = \beta_0 + \beta_{1\,?}\, R_{ME} + \beta_2 R_{AM} + u$$

இங்கு:

$R_T$ = மொத்த தனியார் பணவனுப்புதல்கள் (மில். ரூபா)

$R_{ME}$ = மத்தியகிழக்கு நாடுகளிலிருந்து அனுப்பப்படும் தனியார் மாற்றல்கள் (மில். ரூபா)

$R_{AM}$ = அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களிலிருந்து மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலைக்குச் சென்றவர்கள் அனுப்பும் தனியார் மாற்றல்கள் (மில். ரூபா)

வில்கொக்சன் குறியீட்டு சோதனை முறை (Wilcox on Sign Test method) மூலம் மத்திய கிழக்கு நாடுகளுக்கான வேலை வாய்ப்புகளுக்கும், ஆய்வுப் பிரதேச மக்களின் வாழ்க்கைத் தர மேம்பாடுகளுக்கும் இடையிலான தொடர்பு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

கை வர்க்க (Chi square test) சோதனையைப் பயன்படுத்தி ஆய்வுப் பிரதேசத்தில் மத்திய கிழக்கு நாடுகளுக்கான வேலைவாய்ப்புக்கும், இப்பிரதேசத்திலிருந்து மத்திய கிழக்கு நாடுகளுக்கு சென்றோரின் பிள்ளைகளின் கல்வி அறிவுக்கும் இடையிலான தொடர்பு மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்கான வேலைவாய்ப்பிற்கும் ஆய்வுப் பிரதேசத்தில் மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்றவர்களின் குடும்பங்களில் காணப்படுகின்ற திருமண நிலைக்கும் இடையிலான தொடர்பு என்பன ஆராயப்பட்டுள்ளன.

## பெறுபேறுகளும் கலந்துரையாடலும்

### மத்திய கிழக்கு நாடுகளுக்கான வேலைவாய்ப்பின் போக்கும் அங்கு செல்லத் தூண்டிய காரணிகளும்

இலங்கையிலிருந்து மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலைவாய்ப்புக்காகச் சென்றவர்களில் சுமார் 50 சதவீதம் தொடக்கம் 65 சதவீதத்திற்கும் இடைப்பட்டவர்கள் அம்பாரை மாவட்டக் கரையோரப் பிரதேசத்திலிருந்தே சென்றுள்ளார்கள். இவர்கள் தொழில் பெற்றுச் சென்றுள்ள பிரதான மத்திய கிழக்கு நாடுகளாக சவூதி அரேபியா, குவைத், பஹ்ரேன், ஐக்கிய அரபு எமிரேட், கட்டார், லெபனான்,ஓமான், ஜோர்தான் போன்ற நாடுகள் காணப்படு கின்றன (வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம், 2009).

மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்டவர்களில் 48 சதவீதத்தினர் சவூதி அரேபியாவுக்கும், 17 சதவீதத்தினர் கட்டாருக்கும், 11 சதவீதமானவர்கள்

குவைத்துக்கும் சென்றுள்ளனர். அத்துடன் 67 சதவீத்திற்கும் அதிகமானவர்கள் 26 தொடக்கம் 30 வயதுக்கு இடைப்பட்டவர் களாகவும் காணப்படுகின்றனர்.

மத்திய கிழக்கு நாடுகளுக்கு சென்றவர் களிலும், அதுபோல் சென்று திரும்பியவர் களிலும் 80 சதவீதமான ஆண்களும், 67 சதவீதமான பெண்களும் ஏற்கனவே திருமணம் முடித்தவர்களாகக் காணப்படு கின்றனர். அத்துடன் 87 சதவீதத்தினர் க. பொ. த. சாதாரண தரச் சித்தியுடனும், அதற்குக் குறைவான சித்தியுடனுமே இந் நாடுகளுக்கு வேலைவாய்ப்பு பெற்றுச் சென்றுள்ளனர் என்பது ஆய்வின் மூலம் தெரிய வந்துள்ளது (களஆய்வு, 2013).

பிரதேசவாரியாக மத்திய கிழக்கு நாடு களுக்கு வேலை பெற்றுச் சென்றோரின் எண்ணிக்கையினை அட்டவணை - 1 உம் இந்நாடுகள் நோக்கிய வேலைக்காக செல்லத்துாண்டிய காரணிகளை வரைபடம் - 1 உம் காட்டுகின்றன.

அட்டவணை -1

மாதிரிப் பிரதேசங்களிலிருந்து மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலைக்காகச் சென்றவர்கள்

| பிரதேச செயலகப் பிரிவுகள் | மத்தியகிழக்கு நாடுகளுக்கு சென்றவர்கள் |
|---|---|
| நாவிதன் வெளி | 547 |
| கல்முனை தமிழ் | 520 |
| கல்முனை முஸ்லிம் | 384 |
| சாய்ந்தமருது | 189 |
| காரைதீவு | 344 |
| சம்மாந்துறை | 1457 |
| நிந்தவூர் | 394 |
| ஆலையடிவேம்பு | 834 |
| திருக்கோவில் | 389 |
| அக்கரைப்பற்று | 948 |
| இறக்காமம் | 172 |
| பொத்துவில் | 728 |
| அட்டாளைச்சேனை | 1424 |
| மொத்தம் | 8357 |

மூலம் : புள்ளிவிபர அறிக்கைகள் - 2012

ஆய்வுப் பிரதேச மக்களின் பொருளாதார நடவடிக்கைகளை நோக்கும் போது பெரும்பாலானவர்கள் விவசாயம், மீன்பிடி, விலங்கு வேளாண்மை, கடற்றொழில் போன்ற தொழில்களை மேற்கொள்வதனை அவதானிக்க முடிகின்றது. இதனால் இம் மக்கள் வறுமையில் பெரிதும் சிக்குண்ட வர்களாகக் காணப்படுகின்றனர்.


ஆய்வுப்பிரதேசத்திலிருந்து பெரும்பாலான ஆண்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலைவாய்ப்புப் பெற்றுச் சென்றுள்ளனர். அதுமட்டுமன்றி சுமார் மூன்று தசாப்தங்களாக இப்பிரதேசம் உள்நாட்டு யுத்தத்தினால் பாதிக்கப்பட்டிருந்தது. இது அதிகளவான குடும்பங்கள் தமது ஆண் பிள்ளைகளையும், கணவன் மாரையும் இழக்கச் செய்துள்ளது.

அத்துடன் இப்பிரதேசத்தில் “சீதனம்” என்ற சமூக வழக்காறு காணப்படுவதோடு சீதனத் தின் மிகக் குறைந்த அளவாக ஒரு பெண் பிள்ளைகளுக்கு ஆகக் குறைந்தது ஒரு வீடாவது கொடுக்க வேண்டிய நிலை காணப் படுகின்றது.

இவ்வாறான பல்வேறு காரணிகள் ஆய்வுப் பிரதேசத்திலிருந்து அதிகளவான ஆண் களும், பெண்களும் மத்திய கிழக்கு நாடு களுக்கு தொழிலுக்காக குடிப் பெயர்வை மேற்கொள்ளக் காரணமாயின. இதனை வரைபடம் - 1 தெளிவாகக் காட்டுகின்றது.

வரைபடம் - 1

### மத்திய கிழக்கு நாடுகள் நோக்கி ஊழியம் குடிபெயர்ந்தமைக்கான காரணங்கள்





மூலம் : கள ஆய்வு - 2013

கரையோரப் பிரதேசங்களிலிருந்து மத்திய கிழக்குக்கு வேலைவாய்ப்புப் பெற்றுச் சென்றவர்களில் பெரும்பாலானவர்கள் வீட்டுப் பணிப் பெண்களாகவும், சாராதிகளாகவுமே சென்றுள்ளார்கள். அதே வேளை மிகக் குறைவான எண்ணிக்கையினரே உயர் தொழில்களை பெற்றுச் சென்றுள்ளனர். இதனை வரைபடம் - 2 காட்டுகின்றது.

வரைபடம் - 2

### மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்றவர்களின் தொழில் விபரங்கள்




மூலம்: வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக அறிக்கைகள், புள்ளிவிபர அறிக்கைகள், 2012

### மத்திய கிழக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தியுள்ள பொருளாதார விளைவுகள்

ஆய்வுப் பிரதேசத்தில் மத்திய கிழக்கு நாடுகளுக்கான வேலைவாய்ப்பின் விளைவுகளை நோக்கும்போது பெரும்பாலும் சாதகமான பொருளாதார விளைவுகளே ஏற்பட்டுள்ளன. அந்த வகையில் ஆய்வுப் பிரதேசத்தில் வேலையின்மை பெரிதும் குறைவடைந்துள்ளது. மக்களின் தனியார் வருமானம் அதிகரித்து வறுமை நிலைமை கணிசமான அளவு குறைவடைந்துள்ளது. பெரும்பாலான மக்கள் தமது அடிப்படைத் தேவைகளைத் திறன்பட பூர்த்தி செய்யக் கூடியதாக இருந்தது மட்டுமன்றி அவர்களின் வாழ்க்கை வசதிகள் அதிகரிக்கத் தொடங்கின. மண் வீடுகள் கல் வீடுகளாக மாற்றமடைந்தன. வீடுகளில் குளிர்சாதனப் பெட்டிகள், தொலைக் காட்சிகள், வானொலிப் பெட்டி, வாயு அடுப்பு, துணி துவைக்கும் இயந்திரம், துவிச்சக்கர வண்டி போன்ற பல்வேறுபட்ட நாகரீகப் பொருட்களின் பாவனைகள் அதிகரிக்கத் தொடங்கின.

இந்நிலைமைகளின் கீழ் மத்திய கிழக்கு நாடுகளுக்கான வேலைவாய்ப்பு மக்களின் வாழ்க்கைத்தரத்தை அதிகரித்துள்ளதா என்பதனை பரிசோதனை செய்வதற்காக வில்கொக்சன் குறியீட்டுச் சோதனை (Wilcoxon sign test) முறையைப் பயன்படுத்தி சோதனையிடப்பட்டபோது மதிப்பிடப்பட்ட Z இன் பெறுமதி 2.91 ஆகக் காணப்பட்டது. எனவே ஒரு சதவீத பொருளுண்மை மட்டத்தில் மத்திய கிழக்கு நாடுகளுக்கான வேலைவாய்ப்பு இப்பிரதேச மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தியுள்ளது என்ற முடிவு கிடைக்கப்பெற்றது.

மத்தியகிழக்கு நாடுகளுக்கான வேலைவாய்ப்புக்களால் இப்பிரதேச மக்களின் சேமிப்புப் பழக்கம் அதிகரித்துள்ளதனையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. அது மாத்திரமன்றி இம் மக்களுக்கிடையே வங்கிப் பழக்கம் அதிகரிக்கப்பட்டுள்ளதனையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டவர்களில் 39 சதவீத்தினர் தமது சேமிப்பின் மூலம் சுய தொழில்களை ஆரம்பித்துள்ளனர். அத்துடன் பெரும்பாலானவர்கள் பல ஏக்கர் வயல் காணிகளை கொள்வனவு செய்துள்ளனர். சிலர் நகர்ப்புறங்களில் சிறு கடைகளை ஆரம்பித்துள்ளனர்.

மத்திய கிழக்கு நாடுகளுக்கான வேலை வாய்ப்பினால் இலங்கையின் பொருளா தாரத்தில் ஏற்பட்டுள்ள மிக முக்கியமான சாதகமான விளைவாக அந்நியச் செலா வனி உட்பாய்ச்சல் அதிகரித்துள்ளதனைக் குறிப்பிடலாம். 1992ம் ஆண்டிலிருந்து 2012ம் ஆண்டு வரையும் இலங்கையின் மொத்த தனியார் மாற்றல்களில் மத்திய கிழக்கு நாடுகளுக்கான தனியார் மாற்றல்கள், மற்றும் ஆய்வுப் பிரதேசத்தில் மத்திய கிழக்கு நாடுகளில் வேலை செய்பவர்கள் தமது வீடுகளுக்கு அனுப்பிய தனியார் மாற்றல்கள் எவ்வாறு செல்வாக்குச் செலுத்தியுள்ளன என்பதனை பின்வரும் பிற்செலவு பெறுபேறுகள் மூலம் விளங்கிக் கொள்ளலாம்.

அட்டவணை – 2

பிற்செலவாய்வின் பெறுபேறுகள் (1981 – 2013)

| மாறிகள் | இணைவுக் குணகங்கள் | t யின் பெறுமதி | p யின் பெறுமதி |
|---|---|---|---|
| மாறிலி | 3393 | 3.22 | 0.003*** |
| $R_M$ | 1.4938 | 32.92 | 0.000*** |
| $R_A$ | 0.4269 | 4.22 | 0.000*** |
| $R^2 = 99.9$<br>F = 9753.09<br>Dw = 2.23 | | | |

***1% பொருளுண்மை மட்டம்

பிற்செலவு பெறுபேறுகளினடிப்படையில் **$R^2$**, F என்பனவற்றின் பெறுமதி மிகவும் உயர் வாகக் காணப்படுவதுடன் **Dw = 2.23** ஆகவும் காணப்படுவதனால் வழுக்களுக்கிடையில் தன்னிணைவுப் பிரச்சினை காணப்படாது. எனவே மதிப்பிடப்பட்ட மாதிரியுரு சிறந்த முறையில் பொருத்தப்பட்டுள்ளது என்ற முடிவுக்கு வரலாம். மேலும்,"**t**" இன் பெறுமதி அதிகமாகக் காணப்படுவதனால் இலங்கை யின் மொத்த தனியார் மாற்றல்களை நிர்ண யிப்பதில் மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து அனுப்பப்படும் மொத்த தனியார் மாற்றல் களும், ஆய்வுப் பிரதேசத்திலிருந்து மத்திய கிழக்கு நாடுகளுக்கு சென்றவர்கள் அனுப் பும் தனியார் மாற்றல்களும் பொருளுள்ள வகையில் செல்வாக்குச் செலுத்தியுள்ள தனை அவதானிக்க கூடியதாக உள்ளது.

எனவே அம்பாரை மாவட்டத்தில் கரை யோரப் பிரதேசங்களிலிருந்து மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்றவர்களால் ஆய்வுப் பிர தேசத்தில் வேலையின்மை குறைவடைந் துள்ளது. சேமிப்புக்கள் அதிகரித்துள்ளன, வாழ்க்கைத் தரம் அதிகரித்துள்ளது மேலும், இலங்கையின் அந்நியச் செலாவணி வரு மானம் அதிகரித்துள்ளது. இவ்வனைத்து சாதகமான பொருளாதார விளைவுகளும் இலங்கையின் அபிவிருத்திக்கு பெரிதும் வழிவகுத்துள்ளது.

## மத்திய கிழக்கு நாடுகளுக்கான வேலைவாய்ப்பு ஏற்பட்டுத்தியுள்ள சமூக விளைவுகள்

மத்திய கிழக்கு நாடுகளுக்கான வேலை வாய்ப்பினால் அம்பாறை மாவட்டக் கரை யோரப் பிரதேசத்தில் பல்வேறு வகையான சாதகமான சமூக விளைவுகள் ஏற்பட்டுள்ளன. ஆய்வுப் பிரதேசத்திலிருந்து மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலைவாய்ப்புப் பெற்றுச் சென்றவர்கள் பெரும்பாலானோர்கள் அரபு, உருது, ஆங்கிலம் போன்ற பல மொழிகளில் தமது கருமங்களை ஆற்றக் கூடியவர்களாக காணப்படுவதனை ஆய்வின் மூலம் அறிய முடிந்தது. மேலும் மத்திய கிழக்கு நாடு களுக்கு வேலைவாய்ப்புப் பெற்றுச்

பிள்ளைகளின் கல்வி நிலை உயர்வடைந் துள்ளதனையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது ஆய்வுப் பிரதேசத்தில் கல்வி நிலைக்கும், மத்திய கிழக்கு நாடுகளுக்கான வேலைவாய்ப்பிற்கும் இடையில் உள்ள தொடர்பினைக் கண்டறிந்துகொள்வதற்காக கை - வர்க்க சோதனை யூடாகப் பெறப்பட்ட தரவுகளை பகுப்பாய்வு செய்தபோது பெறப் பட்ட முடிவுகளை அட்டவணை – 3 காண்பிக்கின்றது.

அட்டவணை - 3

ஆய்வுப்பிரதேச பிள்ளைகளின் கல்வி நிலை

| கல்வி நிலை | சமூக நிலை | | மொத்தம் |
|---|---|---|---|
| | மத்திய கிழக்கு சென்ற தொ. பிள்ளைகள் | மத்திய கிழக்கு செல்லாத தொ. பிள்ளைகள் | |
| கல்வி கற்பவர் | 52552 | 42009 | 94561 |
| கல்வி கற்காதவர் | 12675 | 32271 | 44946 |
| இடை விலகியவர் | 5320 | 25976 | 31296 |
| மொத்தம் | 70547 | 100256 | 170803 |

மூலம் : கள ஆய்வு 2013

இங்கு கை- வர்க்க சோதனைப் புள்ளிவிபரம் ($\chi^2$) = 18751 ஆகக் காணப்படுவதனால் ஒரு சதவீத பொருளுண்மை மட்டத்தில் மத்திய கிழக்கு நாடுகளுக்கு தொழில் களுக்காக குடிபெயர்ந்தவர்களது பிள்ளை களது கல்வி நிலைமைகளுக்கும், மத்திய கிழக்கு நாடுகளுக்கு செல்லாதவர்களது பிள்ளைகளது கல்வி நிலைமைகளுக்கும் வேறுபாடு காணப்படுவதுடன் மத்தியகிழக்கு நாடுகளுக்கான வேலைவாய்ப்பினால் கல்வி அறிவு அதிகரித்துள்ளது என்ற முடிவுக்கும் வரக்கூடியதாக உள்ளது.

மத்தியகிழக்கு நாடுகளுக்கான வேலை வாய்ப்பு ஆய்வுப் பிரதேசத்தில் திருமண வாய்ப்புக்களை அதிகரித்துள்ளதா? என்ப தனைக் கண்டறிந்து கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் 87 சதவீதமான பெண்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்கு சென்று வந்த பின்னர் திருமணம் முடித்தனர் என்பது அறியப்பட்டது. இதற்கான காரணம் திருமணம் முடிக்கும் பெண்கள் தான் திருமணம் முடிக்கப்போகும் ஆண்களுக்கு பெருமளவு சொத்துக்களையும், பணத்தையும் சீதனமாக கொடுக்க வேண்டிய நிலைமை இப்பகுதியில் காணப்படுவதனால் எழைப் பெண்களின் திருமணங்கள் பின்தள்ளப் படுகின்றன. மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்லாத திருமண வயதைத் தாண்டிய பெரும்பாலான ஏழைப் பெண்கள் இன்னும் திருமணம் முடிக்காமல் இருக்கின்றனர். ஆய்வுப் பிரதேசத்திலிருந்து மத்திய கிழக்கு நாடுகளுக்கான வேலை வாய்ப்பிற்கும், திருமண வாய்ப்புக்களுக்கும் இடையில் காணப்படும் தொடர்பை கை - வர்க்க சோதனைப் புள்ளிவிபரத்தைப் பயன்படுத்தி சோதனையிட்டபோது. கிடைக்கப்பட்ட பெறு பேறுகளை அட்டவணை – 4 காட்டுகின்றது.

அட்டவணை - 4

மத்தியகிழக்கு வேலைவாய்ப்புக்கும் திருமண வாய்ப்புகளுக்கும் இடையிலான தொடர்பு

| திருமண நிலை | பெண்கள் | | மொத்தம் |
|---|---|---|---|
| | மத்திய கிழக்கு சென்ற பெண்கள் | மத்திய கிழக்கு செல்லாத பெண்கள் | |
| திருமணம் முடித்த வர்கள் | 4125 | 62237 | 66362 |
| திருமணம் முடிக்காத வர்கள் | 629 | 227034 | 227663 |
| மொத்தம் | 4754 | 289271 | 294025 |

மூலம் : கள ஆய்வு 2013

மேற்படி அட்டவணையைக் கொண்டு கை - வர்க்க சோதனையை மேற் கொண்டபோது பெறப்பட்ட கை - வர்க்க சோதனைப் புள்ளி விபரம் **2768.27** ஆகக் காணப்படுகின்றது. எனவே ஒரு சதவீத பொருளுண்மை மட்டத்தில் மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்ற மற்றும் மத்திய கிழக்கு நாடு களுக்குச் செல்லாத பெண்களின் திருமண நிலைமைகளுக்கிடையில் வேறுபாடு காணப்படுகின்றது என்ற முடிவுக்கு வரக் கூடியதாக உள்ளது. ஆகவே மத்திய கிழக்கு நாடுகளுக்கான வேலை வாய்ப் பினால் திருமண வாய்ப்புக்கள் அதிகரித் துள்ளது என்ற முடிவுக்கு வரலாம். அத்துடன் மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் மேற்கொண்ட வர்களின் தன்னம் பிக்கை, சமூக அந்தஸ்த்து என்பனவும் அதிக ரித்துள்ளமையையும் ஆய்வின்போது அவதானிக்க முடிந்தது.

இவ்வாறு பல சாதகமான சமூக விளை வுகள் ஏற்பட்டாலும் பல் வேறுவகையான பாதகமான சமூக விளைவுகளும் ஏற்பட்டுள் ளமையை ஆய்வின் போது அவதானிக்க முடிந்தது.

இலங்கையிலிருந்து மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலைவாய்பை பெற்றுச் சென்றவர்களில் பெரும்பாலானவர்கள் பெண்கள் இவர்கள் கிராமப் புறங்களில் வாழ்பவர்காகவும், வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழ்பவர்களாகவும் காணப்படுகின் றார்கள். இவர்கள் தமது பிள்ளைகளை சிறு வயதிலிருந்து இளைஞர்கள் ஆகும் வரை தந்தையின் அல்லது உறவினர்களின் பராமரிப்பில் விட்டுச் செல்கின்றனர். இத னால் பிள்ளைகள் மறைமுகமாக கவனிக் கப்படாமலும் தகுந்த பராமரிப்பு இல்லா மலும் துஷ்ப்பிரயோகத்திற்கு உள்ளக்கப் படுகின்றார்கள்.

மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து அனுப் பப்படும் பணம் பிள்ளைகளின் கல்விக்கோ, போஷாக்கான உணவுக்கோ செலவழிக்கப் படாமல் வேறு தேவைகளுக்குப் பயன் படுத்தப்படுகின்றது. அத்துடன் அதிகளவான பணம் கணவனின் அல்லது உறவினர்களின் சுகபோக வாழ்வுக்கு செலவு செய்யப்படு கின்றமை ஆய்வின் மூலம் தெரியவந்தது. மனைவியை நீண்ட காலமாக பிரிந்திருக்கும் கணவன், மனைவி அனுப்பும் பணத்தை தனது சொந்த ஆசைகளுக்குப் பயன்படுத்து கின்றார். இதனால் குடுப்பத்தில் பிரிவினை தோன்றியிருக்கின்றது.

மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலை வாய்ப்பை பெற்றுச் சென்றவர்கள் அதிக ளவில் மத்திய கிழக்கு நாடுகளின் தொழில் தருனர்களால் பாதிப்புக்குள்ளாக்கப்பட் டுள்ளனர். ஆய்வுப் பிரதேத்திலுள்ள மாகாண சுகாதாரப் பணிமனையின் அறிக்கையின் அடிப்படையில் தொழில் வாய்ப்புக்காக வெளிநாடுகளுக்கு குடிபெயரும் பெண்கள் அதிகம் கர்ப்பிணிகளாகவும், உளவியல் ரீதியான பிரச்சினை களுக்கும் உள்ளாக்கப் பட்டுள்ளனர் என்று தெரிவிக்கின்றது.

ஆய்வுப் பிரதேசத்தில் உள்ள சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்களை நேர் முகம் கண்டபோது மத்தியகிழக்கு வேலை வாய்ப்பு சிறுவர்களின் கல்வி, குடும்ப முகா மைத்தும், முதியவர்களின் பராமரிப்பு, சமூகப் பற்று, கலாசாரம் போன்ற சமூகவியல் எண்ணக்கருக்கள் மீது எதிர்தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என அவர்கள் குறிப்பிடு கின்றனர்.

## முடிவுரை

மத்திய கிழக்கு நாடுகளுக்கான வேலை வாய்பு ஆய்வுப்பிரதேசத்தில் பல்வேறு வகையான சமூகப் பொருளாதார விளைவு களை ஏற்படுத்தியுள்ளது. எனினும் இது ஏற்படுத்திய சமூகப் பொருளாதார விளைவு களை நோக்கும்போது பாதகமான விளைவு களைவிட சாதகமான விளைவுகளே அதிக மாகக் காணப்படுகின்றன என்பதனை ஆய் வின் மூலம் அறிய முடிகின்றது. இதனால் மத்திய கிழக்கு நாடுகளுக்கான வேலை வாய்ப்பு இலங்கையின் பொருளாதாரத்தில் ஒரு சாதகமாக தோற் றப்பாட்டினையே ஏற்படுத்துகின்றது என்ற முடிவுக்கு ஆய்வின் மூலம் வரக்கூடியதாக உள்ளது.

## விதந்துரைகள்:

மத்திய கிழக்கு நாடுகளுக்கான வேலை வாய்ப்பு இலங்கையின் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிப்பதனால் அதனை அபிவிருத்தி செய்வதில் கொள்கை வகுப்பாளர்கள் கூடிய கவணம் செலுத்த வேண்டிய தேவை காணப்படுகின்றது. எனினும் பின்வரும் விடயங்களையும் கவனத்திற் கொண்டு மத்திய கிழக்கு வேலைவாய்ப்புக்கான கொள்கை வகுக்கும் போது அக்கொள்கை பூரணமானதாகக் காணப்படும்.

(i). மத்திய கிழக்கு நாடுகளுக்கு செல்லும் பணிப் பெண்கள் எதிர்நோக்கும் ஆபத்துக்களை தடை செய்வதற்காக நடவடிக்கைகள் அரசு எடுத்தல்.

(ii). மத்திய கிழக்கு தொழிலாளர்களின் குடும்ப பிரிவிகைளைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை சமூக நிறுவனங்கள் மேற்கொள்ள வேண்டும்.

(iii). உழைத்த பணத்தை சரியாக பராமரிப்பதற்காக வெளிநாட்டு அமைச்சும், தன்னார்வத் தொண்டு நிறுனங்களும் முறையான பயிற்சிகள் மூலம் ஆலோசனைகளை வழங்குதல்.

(iv). மத்திய கிழக்கில் தொழில் புரியும் தொழிலாளர்களது பிள்ளைகளை ஊக்குவிக்கத் தக்க புலமைப்பரிசில் திட்டங்களை அரசாங்கம் அறிமுகம் செய்தல்.

(v). மத்திய கிழக்கில் தொழில் புரியும் தொழிலாளர்களுக்கு குறைந்த வட்டி வீதத்தில் கடன் திட்டங்களை அரசாங்க வங்கிகள் அறிமுகம் செய்தல்.

(vi).மத்திய கிழக்கில் தொழில் புரியும் தொழிலாளர்களுக்கு நலனோம்பு நிலையங்களை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் ஆரம்பித்தல்.

(vii).மத்தியகிழக்கு நாடுகளுக்கு தொழிலுக்காக செல்லும் தொழி லாளர்களுக்கு சிறந்த பயிற்சியளித்தல்.

## உசாத்துனைகள்


Central Bank Report .,(1992 ï 2012). Central Bank of Sri Lanka, Colombo.

அமீன் எம். ஐ. எம்., (1995). *இலங்கை முஸ்லீம் பெண்கள் வெளிநாட்டில் தொழில்புரிவதன் தாக்கம்,* இஸ்லாமிய சிந்தனை ஜுலை – செப்டம்பர், ஜாமியா நளீமியா கலாபீடம், பேருவலை.

சந்திரிகா, ஆர்., (1995). *ஊழியம் தொழில் வாய்ப்பு மற்றும் குடியகழ்வு இலங்கையின் ஊழியப்படையும் வேலையில்லாத் திண்டாட்டமும் அண்மைக்காலப் போக்குகளும்,* பொருளியல் நோக்கு, மே – ஜுன், மக்கள் வங்கி, இலங்கை.

சந்தா அத்தனநாயக்க., (1996). *வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்கான தேர்ச்சியற்ற குடியகழ்வு.* பொருளியல் நோக்கு, ஜனவரி, மக்கள் வங்கி, இலங்கை.

குருஷிஷ் சுவாமி., (1982). *வெளிநாடுகளில் தொழில் புரிவோரின் பண அனுப்பீடுகள்* பொருளியல் நோக்கு - டிசம்பர், மக்கள் வங்கி, இலங்கை.

திட்ட அமுலாக்கல் அமைச்சு., (1985). *வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் தொடர்பான இலங்கையின் அனுபவம்* பொருளியல் நோக்கு – பகுதி - **i** ஏப்ரல், பகுதி – **ii** ஜுன், மக்கள் வங்கி, இலங்கை.

வெளிநாட்டு வேலைவாய்பு அறிக்கை., (2009). *வெளிநாட்டு வேலைவாய்ப்பு அறிக்கை*, இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம், கொழும்பு.

ஜினதாச எம்., (1999). *வெளிநாடுகளில் வேலை செய்பவர்கள் மூலம் பொருளாதாரத்திற்குகிட்டும் அனுகூலங்கள்* பொருளியல் நோக்கு, ஆகஸ்ட் - ஒக்டேபர், மக்கள் வங்கி, இலங்கை.

புள்ளிவிபர அறிக்கைகள், (2011). தொடர்புடைய பிரதேச செயலகங்கள், அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசம்.